# விவேகவாணி

## VIVEKA VANI

சோபகிருது கார்த்திகை - மார்கழி 5125

தவம்-39 சேவை-8 தமிழ் மாத இதழ் டிசம்பர் - 2023 தனிப்பிரதி ரூ.15/- ஆண்டுச்சந்தா ரூ.175/-
Volume - 39 Issue - 8 Tamil Monthly December – 2023 Single Issue Rs.15/- Annual Subscription Rs.175/-



PCAV2201

# அட்டைப்பட விளக்கம்

பட்டினி இல்லாத பாரதம் பற்றி கனவு கண்ட டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பிரபல வேளாண் விஞ்ஞானியும், நிர்வாகியும், மனித நேயருமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அண்மையில் காலமானார். அவர் பாரத நாட்டுக்கு ஆற்றிய சேவை மிகப் பெரியது. உயிரியல்கருவிஞ்ஞானி,நிர்வாகி,விஞ்ஞான ஆராய்ச்சியாளர், விஞ்ஞான ஆசிரியர் என்று பல சிறப்புக்களைக் கொண்டவர். பாரத அரசின் தவறான கிராமப்புற விரோதக் கொள்கைகளினால் பாரத நாட்டில் பெரிய உணவுப் பஞ்சம் வந்தது. 1964, 65-இல் அமெரிக்காவில் உளுத்துப் போன கோதுமையை வாங்கித் தின்னும் நிலைமை பாரத மக்களுக்கு ஏற்பட்டது. உலகம் முழுவதும் மக்கள் தொகை பெருகி வரும் வேகத்தில் உணவு உற்பத்தி வளரவில்லை என்பதால் உலகளாவிய உணவுப் பஞ்சம் மக்களை வாட்டும் என்று பொருளாதார அறிஞர்கள் எச்சரித்தனர். அந்தச் சமயத்தில் நார்மன் ஈ. போர்லாக் என்ற விவசாய விஞ்ஞானி தன்னுடைய தாவரக் கரு ஆராய்ச்சி மூலம் குட்டை ரக கோதுமையைக் கண்டுபிடித்தார். அந்தக் கோதுமையின் தாள், வைக்கோல், உயரம் குறைவாகவும், கோதுமை உற்பத்தி அதிமாகவும் இருக்கும். இதனால் உலகின் உணவு உற்பத்தியில் பெரும் மாற்றம் வந்தது. இதற்காக நார்மன் ஈ. போர்லாக்கிற்கு அமைதி நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்த விஞ்ஞானத்தை பாரதத்தில் நடைமுறைப்படுத்தும் பணி தமிழ்நாட்டில் இரண்டு மாமனிதர்களுக்குக் கிடைத்தது. ஒருவர் அரசியல்வாதியும் தலைசிறந்த நிர்வாகியுமான பாரத ரத்னா சி. சுப்பிரமணியம்; இன்னொருவர் வேளாண் ஆராய்ச்சியாளரும் நிர்வாகியுமான எம்.எஸ். சுவாமிநாதன் இவர்களுடன் ஸ்ரீ ஜகஜீவன் ராமும் சேர்ந்து அணிவகுத்தார். அவர்கள் பாரதத்தின் ஒவ்வொரு மாநிலத்திலும் விவசாயப் பல்கலைக்கழகங்களைத் துவக்கினார்கள். விவசாயப் ஆராய்ச்சி மையங்கள் மூலம் அந்தந்த ஊருக்குப் பொருத்தமான கோதுமை, நெல் வகைகளை உண்டாக்கினார்கள். விவசாய ஆராய்ச்சியின் பயன்களை உடனுக்குடன் உழவர் பெருமக்களுக்கு எடுத்துச் சொல்லும் வானொலித் தொடர்புகள் வலை போல நாடு முழுவதும் உண்டாக்கப்பட்டன. அதனால் விவசாயிகள் காலையில் கேட்கும் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கு மாலையிலேயே வானொலியில் விடை கிடைத்தது. இப்படி அரசியல் ஆதரவுடன் மிகப்பெரிய விஞ்ஞான வேளாண் கல்வி ஆராய்ச்சிக் கட்டமைப்பை உண்டாக்கியவர் டாக்டர் எம்.எஸ். சாமிநாதன் ஆவார். அவர் கும்பகோணத்தில் டாக்டர் எம்.எஸ். சாம்பசிவனுக்கு 07/08/1925-ல் அவர் மகனாகப் பிறந்தார். இந்தியாவிலும், அமெரிக்காவிலும் வேளாண் கல்வி கற்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சியில் கவுண்சிலின் தலைவராக, தலைமை இயக்குனராகப் பதவி வகித்தார். பாரத அரசின் வேளாண் துறைச் செயலாளராகவும் அவர் பணி வகுத்தார். அவருடைய பணியின் பயனாக பாரதம் கோதுமை பிச்சை வாங்கும் நாடு என்ற நிலையில் இருந்து தானியங்கள் விற்பனை செய்யும் நாடு என்ற நிலைக்கு பத்தே வருடங்களில் உயர்ந்தது. அவர் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக இருந்தாலும் உலகம் முழுவதும் மக்கள் பட்டினி இன்றி வாழ வேண்டும் என்று கனவு கண்டார். அதனுடைய விளைவாக இந்தியா அபரிமிதமான கோதுமை உற்பத்தி நாடாகவும், அரிசி உற்பத்தி நாடாகவும் உருப்பெற்றது. விவசாயிகள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி வந்தது. அவர் விவசாயிகளின் உழைப்புக்குத் தகுந்த கூலி கிடைக்க வேண்டும் என்று விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயக் குழுவை அமைத்து விவசாயிகளுக்கு நியாய விலை

கிடைக்க வழி வகுத்தார். உற்பத்திக்குப் பிறகு தானியங்கள் வீணாவதைத் தடுக்கும் விதத்தில் விவசாய ஆராய்ச்சி மையங்களை தோற்றுவித்தார். அவருடைய பன்முகச் சேவையைப் பாராட்டி உலகம் மணிலாவில் உள்ள உலக அரிசி ஆராய்ச்சி மையத்தின் தலைவராக அவரை நியமித்தது அவருடைய ஆராய்ச்சி நிர்வாகத்தின் பயன் உலகம் முழுவதும் கிட்டிற்று. அவருக்குக் கடமையே கண்ணாக இருந்தது. ஆனாலும் அவரைத் தேடிப் பரிசுகளும், விருதுகளும் தாமாகவே வந்தடைந்தன. உலக உணவுப் பரிசு என்பது உலக நோபல் பரிசுக்கு இணையானது. அப்பரிசு அவருக்குக் கொடுக்கப்பட்டது. மக்சேசே என்ற அமைதிப் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. பலப்பல பல்கலைக்கழகங்கள் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கின. பாரத அரசும் அவருக்கு பத்ம விபூஷண் என்ற கௌரவம் அளித்தது. அவர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு சென்னையில் தரமணி என்ற இடத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தை உண்டாக்கி கிராம அளவில் அமைதியையும், விவசாய உற்பத்தி ஆராய்ச்சியையும், விஞ்ஞான மனப்பாங்கையும் வளர்க்க முயற்சி செய்தார். இத்தகைய மகானுக்கு நாம் அஞ்சலி செலுத்துவது வாயினால் அல்ல, வயிற்றினால்! பாரத நாட்டு விவசாயிகள் இன்று உலகத்தின் தலைசிறந்த உற்பத்தியாளர்களாகத் திகழ்கிறார்கள். அதற்கு இவர் முக்கிய காரணங்கள் ஆவார். அவருடைய பணிக்குப் பிறகு தான் பாரதம் இராணுவத்திலும், தொழில் துறையிலும், செல்வச் செழிப்பும், வளமும் நிறைந்த நாடாகி இன்று ஒளி வீசுகிறது. விவசாயத்தில் ஒரு ரூபாய்க்கு உற்பத்தி நடந்தால் பிற துறைகளில் நான்கு ரூபாய்க்கு வளர்ச்சி ஏற்படும் என்று கூறுவார்கள். இப்படி பாரத நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு அடிகோலிய ஸ்ரீ எம்.எஸ். சுவாமிநாதன் 28/09/2023 அன்று 97-ம் வயதில் காலமானார். இன்று பாரத நாட்டை உருவாக்கிய மனிதர்களில் ஒருவராக அவர் திகழ்கிறார். அவரைப் போற்றி அஞ்சலி செலுத்தியவர்களின் முதலாவதாக பாரதப் பிரதமர் உயர்திரு நரேந்திர மோதி அவர்கள் உள்ளார்கள். பாரத நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணியால் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்று ஸ்ரீ எம்.எஸ். சுவாமிநாதனை விவேகானந்த கேந்திரம் வணங்கி அஞ்சலி செலுத்துகிறது.

## மாதம் ஒரு மந்திரம்

**இந்த மாத மந்திரமாக பாரதியார் பாடல்கள் பதிகம்** 200 / 201

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்.
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்;
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே.

* * * * *

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்! - இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்-பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

உடன்பிறந் தவர்களைப் போல்-இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்
திடங்கொண் டவர்மெலிந்தோரை-இங்கு
தின்று பிழைத்திட லாமோ?
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திடவேண்டும்.

ஒன்றென்று கொட்டு முரசே! - அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! - இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.